செ.வெ.எண். 13/பிப்ரவரி தேதி : 04.02.2017

# தருமபுரி மாவட்டம், ரூ. 36.00 இலட்சம் மதிப்பில் புதிய தார்சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பூமி பூஜை.




தருமபுரி மாவட்டம், ரூ. 36.00 இலட்சம் மதிப்பில் புதிய தார்சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வெள்ளேகவுண்டன்பாளையம் (பிடமனேரி) முதல் ஒகேனக்கல் இணைப்பு சாலை வரை திட்ட பணிகளுக்கான பூமி பூஜையை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் 1115 மீட்டர் ரூ.22 இலட்சங்கள் மதிப்பீட்டில் பெருமாள் கோவில் சாலை முதல் ஒகேனக்கல் இணைப்பு சாலை வரை புதிய தார்சாலை மற்றும் 500 மீட்டர் ரூ. 14 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இந்த மண் சாலை தார் சாலையாக மேம்பாடு செய்வதன் மூலம் நெல்லிநகர், பிடமனேரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பயனடைவர் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு. டி.ஆர். அன்பழகன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திருமதி. நிர்மலா கோவிந்தசாமி, மத்தியக்கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. வேலுமணி,

தருமபுரி மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.